## தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகம் - 2016

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் III ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 02**

(i) மீளாய்வாண்டில் கையேற்கப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,647,552 ஆக இருந்த போதிலும், ஆண்டில் பணமாக செலுத்தப்பட்ட அளவு ரூபா 1,528,552 ஆக இருந்தது. எவ்வாறாயினும் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது கையேற்கப்பட்ட சொத்துக்களின் மொத்தப் பெறுமதி காசு வெளிப் பாய்ச்சலாக கருதப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்த முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் மற்றும் ஆரம்ப மீதிகளுக்காக செய்யப்பட்ட சீராக்கம் ரூபா 1,012,967 தொகை செயற்பாட்டு இலாபத்திற்கு தாக்கம் செலுத்தப்படாதிருக்கையில் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது செயற்பாட்டு இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக செலுத்த வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடை நடைமுறைபொறுப்பு அதிகரிப்பாக சீராக்கம் செய்யப்பட்டிருக்கையில் செயற்பாட்டு இலாபத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நிலையான சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையினால் ரூபா 18,316,900 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டின் போது அரச மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்பட்ட மானியங்களின் கூட்டுத்தொகை ரூபா 42,812,944 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அம்மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 16,146,691 ஆக இருந்தது. எவ்வாறாயினும் மானியங்களைக் கணக்கு வைத்தல் தொடர்பாக நிறுவகத்தினால் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டில் சொத்துக்கள் மீள்மதிப்பீட்டின் மூலம் உருவாகிய ரூபா 4,800,000 ஆன மிகை, மூலதன மாற்றங்கள் கூற்றில் வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அது திரண்ட நிதியத்துடன் சேர்த்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மூன்று சொத்து வகைக்குரிய பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளுடன் ஒப்பிட்டபோது முறையே ரூபா 65,424 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1999 இன் 01 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவக வழிகாட்டி | |
| (i) 7 (3) பிரிவு | முதுமானி / முனைவர் பாடநெறிகள் தொடர்பான நடவடிக்கைகள் உயர் பட்டப்படிப்பு குழுவொன்று மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், இப் பாடநெறிக்குரிய செயற்பாடுகள் கல்விக்குழுவின் ஊடக மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) 12 (1) (இ)பிரிவு | கல்விக்குழுவின் அங்கத்தவராக அதிகாரச்சட்டத்தின் கீழ் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுகின்ற பல்கலைக்கழகங்களின் ஒவ்வொரு நூலகம் மற்றும் தகவல்கள் விஞ்ஞான பிரிவின் தலைவர்கள் 2016 ஆம் ஆண்டில் எவ்வித கூட்டங்களுக்கும் சமூகமளித்திருக்கவில்லை. |
| (iii) 12 (1) (உ)பிரிவு | கல்விக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்ட இலங்கை தேசிய நூலகச் சங்கத்தின் பிரதிநிதியாக 2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற 09 கூட்டங்களில் 3 கூட்டங்களுக்கு மாத்திரம் சமூகமளித்திருந்தார். |

(iv) 12 (1) (ஊ)பிரிவு — கல்விக்குழுவின் அங்கத்தவராக அனைத்துப் பல்கலைக்கழக நூலகர் குழுவின் அங்கத்தவர்களுக்கிடையே பெயரிடப்பட்ட இரண்டு நூலகர்கள் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டிற்காக மாத்திரம் இரண்டு நூலகர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,489,462 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 14,850 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,474,612 தொகையான அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. செலவினங்கள் ரூபா 6,919,348 ஆல் அதிகரித்தமைக்கு ஒப்பாக வருமானம் ரூபா 10,393,960 ஆல் அதிகரித்திருந்தமையால் மேற்படி நிதி விளைவகளில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்யை 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,796,279 ஆன நிறுவகத்தின் பற்றாக்குறை 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது நிதி மிகையொன்றாக இருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் மீண்டும் கவனத்தில் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டின் ரூபா 10,448,949 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 25,327,683 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

உலக வங்கி உதவியின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட பொதுக் கல்விச் செயற்திட்டம் 2 (GEP-2) (1994 – 2002) இன் கீழ் பாடசாலை நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்காக சேர்க்கப்பட்ட நூலகர்கள் மற்றும் அந்தப் பாடசாலைகளின் ஆசிரிய நூலகர்களுக்காக தேவையான மனித வளங்களைப் பயிற்றுவிப்பதற்கு கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் விஞ்ஞான நிறுவகம் 1999 ஏப்ரல் 20 ஆந் திகதி உருவாக்கப்பட்டது.

நிறுவகத்தின் மூலம் மீளாய்வாண்டில் பாடநெறிகளை நடாத்துதல் தொடர்பான செயலாற்றல் பின்வருமாறு இருந்தன.

(அ) ஆசிரிய நூலகர்கள் தொடர்பான கலைமானி (MTL) மற்றும் ஆசிரிய நூலகர் தொடர்பான பட்டபின் டிப்ளோமா (PGTL) போன்ற பாடநெறிகளை நடத்துவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆசிரிய நூலகர்களை ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு வழங்குதல் நடைமுறைக்கு ஆசிரிய நூலகர்கள் தொடர்பான கலைமானி (MTL) மற்றும் ஆசிரிய நூலகர் தொடர்பான பட்டபின் டிப்ளோமா (PGTL) போன்ற தகைமைகளை உள்ளடக்குவதற்கு 2009 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 09/1488/316/055 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் கல்வி அமைச்சு செயற்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், இத்தகைமைகள் ஆசிரியர் கோவை பிரமாணக் குறிப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆசிரிய நூலகர்கள் தொடர்பான கலைமானி (PGTL) பாடநெறிக்காக 2012, 2013, 2015 மற்றும் 2016 ஆம் கல்வியாண்டுகளுக்காக மாணவர்கள் பதிவு செய்யப்படாதிருந்ததுடன் 2010 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 20 ஆக இருந்ததுடன் அதில் 09 பேர் பாடநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்ததுடன் எஞ்சிய 11 பேரும் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர்.

(iii) ஆசிரிய நூலகர்கள் தொடர்பான கலைமானி (MTL) பாடநெறிக்காக 2013, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக 26 மாணவர்கள் பதிவுசெய்திருந்ததுடன் அதில் 13 பேர் பாடநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்ததுடன் 13 பேர் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர்.

(iv) மேற்படி (i) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை பாடநெறிகளுக்காக மாணவர் கேள்வி குறைவடைவதற்கு காரணங்களாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நூலக மற்றும் தகவல் விஞ்ஞான முதுமானி தத்துவவியல் / முனைவர் பட்ட பாடநெறிகளுக்காக தொடர்ச்சியாக ஒவ்வொரு கல்வியாண்டிற்காகவும் இணையத்தளம், செய்தித்தாள் மற்றும் வர்த்தமானி மூலம் தகவல்கள் விளம்பரப்படுத்தப்பட்டு மாணவர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், 2007-2010 முதல் 2016-2019 வரையான 10 கல்வியாண்டுகளில் 6 ஆண்டுகளுக்கு பாடநெறிகளுக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காமல் இருந்ததுடன் ஏனைய கல்வியாண்டுகளுக்காக 19 மாணவர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(i) 2007/2010 கல்வியாண்டிற்காக பதிவுசெய்யப்பட்ட 07 மாணவர்களில் ஒரு மாணவர் 2017 ஆம் ஆண்டின் போது முதுமானி பட்டத்தையும் இன்னுமொரு மாணவர் 2016 ஆம் ஆண்டின் போது முதுமானி பட்டத்தையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்ததுடன், எஞ்சிய மாணவர்கள் பாடநெறியை விட்டுச்சென்றிருந்தனர்.

(ii) 2011/2014 கல்வியாண்டில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட 3 வருடக் கல்விக் காலம் கடந்திருந்ததுடன், அம்மாணவர்கள் பாடநெறி காலத்தை நீடிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நூலக மற்றும் தகவல் விஞ்ஞான கலைமானி (MLS – FT) பட்டப் படிப்பு பாடநெறி 2 ஆண்டு கால பாடநெறியாக இருந்துடன், 2013-2015 மற்றும் 2014-2016 என 02 கல்வியாண்டுகளுக்காக பதிவுசெய்யப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 11 ஆக இருந்ததுடன், 05 மாணவர்கள் பாடநெறியை பூர்த்தி செய்திருந்தனர். எவ்வாறாயினும் இரண்டு மாணவர்கள் பாடநெறியை விட்டுச்சென்றிருந்ததுடன் 04 மாணவர்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாடநெறியில் தரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 18 மாத பாடநெறியொன்றான தகவல் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பாடநெறி (PGDIM) இற்காக 2013-2014 மற்றும் 2014 - 2015 ஆகிய 2 கல்வியாண்டுகளுக்காக 27 மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டு 07 மாணவர்கள் மாத்திரம் பாடநெறியை பூர்த்தி செய்திருந்ததுடன் 10 மாணவர்கள் காலத்தை நீடிப்புச் செய்திருந்தனர். மேலும் 10 மாணவர்கள் பாடநெறியை விட்டுச்சென்றிருந்தனர். 2015-2016 கல்வி ஆண்டிற்காக 11 மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் 2016-2017 கல்வியாண்டிற்காக எந்தவொரு மாணவரும் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.2 நிதியப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு அவ்வாண்டிலேயே மேற்கொள்ளப்படாமையால் செலவிடப்படாத அரச மூலதன மானியக் கணக்கில் 2016 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,362,641 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்காக ரூபா 4,200,000 ஆன மானியம் கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 762,910 மற்றும் ரூபா 1,301,006 தொகை முறையே மீண்டெழும் மானியங்கள் மற்றும் மூலதன அபிவிருத்தி மானியக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருந்தன. கொள்வனவிற்காக ஆண்டினுள் ரூபா 1,528,552 செலவிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 2,970,173 ஆக இருந்தது.

(ஆ) 1999 இன் 01 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவக வழிகாட்டியின் 11 (2) (ஐ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் நடவடிக்கைகளுக்காக உடனடியாக தேவைப்படாத பணத்தை ஆக்கபூர்வமாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி நிறுவகத்திற்குச் சொந்தமான நடைமுறைக் கணக்குகளின் மீதி ரூபா 12,366,248 தொகையும் ஒவ்வொரு மாத இறுதியிலும் சராசரி வங்கி நடைமுறைக் கணக்கு மீதி ரூபா 9,664,521 எனப் பேணப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் காலத்திற்குக் காலம் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | கணனி மற்றும் உபபாகங்களின் கிரயம் இனங்காணக்கூடிய வகையில் பதவேடுகள் பேணப்பாடமை. |
| (ஆ) | தொழிற்பாட்டுக் கட்டுப்பாடு | பாடநெறிகளுக்காக மாணவர்களின் கேள்வியை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |